## விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2016

விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1979 திசெம்பர் 26 ஆம் திகதிய 68/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் 20 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை நிறுவகத்தின் தலைவருக்கு 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின்

நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமங்கள்

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

(அ) மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 221,145 ஆன கணக்காய்வு கட்டணங்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகளின் பின்னர் தொழிற்பாடல்லாத செலவினமாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 27(ஆ) ஆம் பந்திக்கு முரணாக தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப்பாய்ச்சலை கணக்கீடு செய்யும் போது ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பேரில் பெறுமானத்தேய்வு ரூபா 57,053 மற்றும் அரசின் மானியத்தின் பேரில் காலக்கழிவு ரூபா 57,053 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 10,526,172 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 05 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கான கொடுப்பனவு | 9,857,087 | நிதி மற்றும் செயலாற்றல் முன்னேற்ற அறிக்கை |
| (ஆ) | ஆராய்ச்சி படிகள் | 669,085 | அங்கீகாரமும் முன்னேற்ற அறிக்கையும் |
| | | 10,526,172 | |

**2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்**

கொள்வனவு தொடர்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணம் அக்கொள்வனவு செய்த உருப்படிகளில் குறைபாடுகள் காணப்பட்டால் அவற்றை சரிசெய்வதற்கோ அல்லது குறித்த நிறுவனத்திற்கு மீளக் கொடுப்பனவு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறில்லா விட்டால் நிதிப்பிரமாணம் 571(ஈ) பிரகாரம் நிறுவகத்தின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 839,707 பெறுமதியான நிறுத்திவைத்தல்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அப்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
| --- | --- |
| (அ)) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 103 | மூன்று ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மூலம் 1993 முதல் 1996 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4,353,301 பெறுமதியான நிலையான சொத்துக்கள் பௌதீக ரீதியில் நிறுவகத்தில் காணப்படாமையால் அவற்றை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு காணாமல் போன சொத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவை | |
| II ஆம் பகுதியின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.2 இன் (ii) மற்றும் (iii) ஆம் பிரிவுகள் | தமது கடமைகளுக்கு மேலதிகமாக மேற் கொள்ளப்படும் வேலைகளுக்காக உழைக்கும் கட்டணங்களிலிருந்து 10 சதவீதமான பகுதியை தாம் உரித்தாகும் உயர் கல்வி நிறுவகத்திற்குச் செலுத்த வேண்டிய போதிலும், விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 18,856,295 ஆன வெளிவாரி விரிவுரைக் கட்டணங்களிலிருந்து ரூபா 1,885,629 ஆன கட்டணத்தை, கொடுப்பனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் கழித்து உரிய நிறுவகத்தின் நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் (ஆ) பந்தி | மீளாய்வாண்டில் மாணவர்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 710,300 ஆன செயல்நிமித்த கட்டுநிதி ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான வசதிகள் நிதியத்தின் மூலம் விவசாய பீடத்தின் சிரேஷ்ட நிதியாளருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அம்முற்பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 38,996,509 மிகையாக இருந்ததுடன், அதனோடெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 40,129,963 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,133,454 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய உழைப்புக்கள் ரூபா 8,536,209 ஆல் அதிகரித்த போதிலும், தனிப்பட்ட சம்பளம் மற்றும் வேதனங்கள் ரூபா 5,778,728 ஆல் அதிகரித்தமையும் அறவிட முடியாக் கடன் செலவினம் ரூபா 4,329,266 ஆல் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை மீளாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையிலும் மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கம் செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 67,882,740 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 112,221,681 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1979 இன் 09 ஆம் இலக்க விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் வழிகாட்டியின் பிரகாரம் நிறுவகத்தின் நோக்கங்கள் சுருக்கமாக கீழே காட்டப்பட்டுள்ளன.

- பட்டப்பின் படிப்பு பாடநெறிகளில் உயர் கல்விசார் நியமங்களை பூர்த்தி செய்தலும் பேணிச் செல்லலும்.
- பட்டப்பின் படிப்பு பட்டதாரிகளுக்கிடையே உயர் தொழில்சார் மற்றும் தலைமைத்துவ பண்புகளைப் பேணிச்செல்லல். பட்டப்பின் மாணவர்களிடம் உயர் ஒழுக்கம் மற்றும் விழுமியங்களை ஏற்படுத்துதல் விரைவாக மாற்றமுறும் உலகலாவிய அபிவிருத்திக்கு இயைபாகக் கூடிய பட்டப்பின் பட்டதாரிகளை உருவாக்குதல்.
- உயர் நியமங்களின் அடிப்படை மற்றும் பிரயோக ஆராய்ச்சிகளை மேம்படுத்தல் மற்றும் மாணவர்களுக்கிடையே பிரயோக ஆராய்ச்சிகளுக்காக சாத்தியப்பாட்டினை ஏற்படுத்தல்.

- கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் செயற்படுத்தல் என்பவற்றிற்காக திறமையான அர்ப்பணிப்புடைய பதவியணியினரையும் செயற்திறனான நிர்வாக மற்றும் தொழில்நுட்ப உதவிப் பதவியணியினரையும் ஈடுபடுத்துதல், அறிவினை விரிவாக்குதல் மற்றும் நூலகத்தை மேம்படுத்துதல்.

- நிறுவக இயலளவினை பலப்படுத்துதுல், ஆசிய வலயத்திலும் அதற்கு அப்பாலும் பட்டப்பின் படிப்பு கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையமொன்றாக சிறப்பினை அடைந்து கொள்ளல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சர்வதேச மற்றும் உள்நாட்டு தரப்படுத்தலின் போது வெளிநாட்டு மாணவர்கள் பதிவு செய்யும் எண்ணிக்கை பிரதான நியதியாக கருத்திற் கொள்ளப்பட்ட போதிலும், கடந்த 04 ஆண்டுகளில் 03 வெளிநாட்டு மாணவர்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு 2015 ஆம் ஆண்டின் போது உலக தரப்படுத்தலின் (World Ranking) போது 15,632 ஆன இடமும் உள்நாட்டு ரீதியில் 27 இடமும் கிடைத்திருந்ததுடன் 2016 ஆண்டின் போது முறையே 16,389 ஆவது இடத்தையும் 24 இடத்தையும் பெற்றிருந்தது.

(ஆ) வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக (MBA) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை முறையே 179 மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் அதில் பாடநெறியை 07 மாணவர்கள் அதாவது பதிவு செய்யப்பட்ட மாணவர்களில் 4 சதவீதம் மாத்திரமே வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்தனர். M.Phill by course work and research பாடநெறிக்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட மாணவர்களில் எந்தவொரு மாணவரும் பாடநெறியை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(இ) விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அதன் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 85,279,284 முதல் ரூபா 343,204,566 வரை தொடர்ச்சியாக அதிகரித்து சென்றிருந்தது. எனினும் நிறுவகம் அந்நிதியை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக கவனம் செலுத்தாமை இவ்வாறு நிதிய மீதிகள் தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

### 4.2 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,499,081 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மற்றும் ரூபா 348,560 பெறுமதியான இரசாயனப் பொருட்கள் நிறுவகத்தின் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்படாமல் விவசாய பீடத்திற்கு நேரடியாக வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் மூலதன மானியங்கள் மூலம் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்திலிருந்து புறம்பான 07 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 273,240 வழங்கி கொள்வனவு செய்யப்பட்டிருந்த பாவனைப் பொருட்கள் நிறுவகத்திற்கு கிடைக்காமல் இருந்ததுடன் பதிவேடுகளிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

நிறுவகத்தினால் நடாத்தப்படாத பாடநெறிக்குரிய ஏனைய வெளிநிறுவனமொன்றின் விரிவுரையாளர் ஒருவருக்கு இந்தியாவில் நடைபெற்ற பாடநெறியொன்றிற்காக சமூகமளிப்பதற்காக ரூபா 462,122 ஆன வியமானப் பிரயாணச் சீட்டு மற்றும் விசாக் கட்டணங்களாக நிறுவகத்தின் நிதியத்தால் செலவிடப்பட்டிருந்தது.

### 4.4 நிதியத்தின் குறைப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெளி நிறுவனமொன்றினால் நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 11,016,355 தொகை அந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாமல் நிலையான சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டின் இறுதியில் 03 சேமிப்புக் கணக்குகளில் ரூபா 690,482 ஆன மீதியொன்று 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செயலற்று இருந்தது.

(இ) மூலதன சொத்துக்கள் கையேற்றல், மேம்படுத்துதல், புனரமைப்பிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 10,000,000 தொகையில் அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 3,467,000 தொகை அதாவது 34.67 சதவீதமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு (MBA) பாடநெறியை பின்பற்றும் மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக நிறுவகத்தினால் 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையான மதிப்பீடொன்று இல்லாமல் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களில் 2017 சனவரி 30 ஆந் திகதியில் உள்ளவாறு பயன்பாட்டிற்குப் எடுக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த புத்தகங்களின் பெறுமதி ரூபா 1,342,539 ஆக இருந்தது.

(ஆ) தேவைப்பாடு முறையாக இனங்காணப்படாமல் அச்சிட்டமையால் 2017 சனவரி 30 இல் உள்ளவாறு நிறுவகத்தின் களஞ்சியத்தில் எஞ்சியிருந்த பல்வேறு வெளியீடுகளின் பெறுமதி ரூபா 438,638 ஆக இருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு உள்ளக கணக்காய்வுப் பிரிவினாலும் தமது நிறுவனத்திற்காக இலக்கிடப்பட்ட திகதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆரம்ப அறிக்கைகள், காலாண்டு அறிக்கைகள் மற்றும் உரிய ஆண்டின் பொழிப்பறிக்கை கணக்காய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பெறுகைகள் குழு

அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், குறைந்தது 03 ஆண்டு காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் அதில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், அடுத்துவரும் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகள் விபரமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் பிரதான பெறுகை திட்டம் 06 மாதங்களை மிகைக்காத காலத்திற்கிடையே முறையாக நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த பாதீடு, வருடாந்த கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் நீண்டகால இலக்கை நிறைவேற்றுவதற்கும் வருட ஆரம்பத்தில் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் மூலதனச் செலவினமாக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தில் 52.14 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்த காரணத்தினால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதி முகாமைத்துவம் | உரிய நோக்கங்களை நிறைவேற்ற முடியுமான வகையில் மானியங்கள் மற்றும் நிதியங்கள் பயன்படுத்தப்படாமை. |
| (ஆ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல் | நிதிப் பிரமாணங்கள் மற்றும் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பராமரிக்கப்படாமை. |